ஆ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. து. இராசரத்தினம் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கும் பட்டாபிராமில் கலவரம் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது. இது சம்பந்தமான ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று காலைதான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10.)

திரு. கு. பா. பழனியப்பன் : தலைவர் அவர்களே, விழுப்புரத்திற்கு அருகிலே பிடாரம் என்ற கிராமத்திலே கை காகிதத் தொழிற்சாலையிலே 51 பேர்கள் கைது செய்யப்பட்டு ஒரு பதட்டமான சூழ்நிலை இருப்பது குறித்து நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். அதை எடுத்துக்கொள்ள வேண்டுமா இல்லையா என்பது ஆய்வில் இருக்கிறது.

3 ஒத்திவைப்புத் தீர்மானம்.

பி. டி. சி. பேருந்துகளுக்கு வேலூரில் சேதம் விளைவித்திருப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, செ. சிவசாமி, ஏ. டி. கருப்பையா, என். எஸ். வி. சித்தன், கே. எம். தங்கமணி' ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், என். பழனிவேல், இ.ரெ. இராசமாணிக்கம், இ. எஸ். எம். பக்கீர் முகமது, செ. இராமலிங்கம், துரைமுருகன், ஜி. சொக்கலிங்கம் ஆகியோர் ''வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பேருந்து ஒன்றுக்கு தீ வைதத்தும் மேலும் 7 பேருந்துகளுக்கு சேதமேற்படுத்தியும் உள்ளதால் அப்பகுதியில் ஏற்பட்டு உள்ள கவலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்று தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.